[1993 மார்ச் 23

156

மத்திய அரசு அளிக்கும் உர மானியம்

*15751—திரு. செ. து. வரதராஜன் :

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடை யளிப்பாரா :—

மத்தியஅரசு உர மானியத்தை ரத்து செய்து இருப்பதை மறு பரிசீலனை செய்யுமாறு தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்துமா ?

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு 24.8.1992 அன்று உரக்கட்டுபாட்டுக் கொள்கை யைமாற்றியமைத்தது. அதில் ஏழு விதமான தழைச்சத்து உரங் களைக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தும், மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்து ஆகிய உரங்களை தன்னுடைய கட்டுப் பாட்டின்கீழிருந்து நீக்கியது. அதனால் மணிச்சத்து மற்றும் சாம்பல் சத்து ஆகிய உரங்களின் விலை மிகக் கடுமையாக உயர்ந்தது. அந்த விலை உயர்வால், தமிழக விவசாயிகள் உரத்திற்காக மேலும் 350 கோடி ரூபாயைச் செலவிடுகின்ற சுமையை ஏற்றுக் கொண்டார்கள். இந்தச் சுமையை அறிந்த நம்முடைய ஒப்பற்ற முதல்வர் அவர்கள் 25.9.1992 அன்று இந்தப் பேரவையிலே ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து நிறை வேற்றி மத்திய அரசுக்கு அனுப்பியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு செ. து. வரதராஜன் : மாண்புமிகு பேரவைத் தலை வர் அவர்களே, மத்திய அரசு உரமானியத்தை ரத்து செய்த தாலும், அரிசி விலையை உயர்த்தியதாலும், இவைகள் எல்லாம் நுகர்வோர் மீது சுமத்தாமல், ஆண்டு ஒன்றுக்கு 400 கோடி ரூபாயும் நாம் கொடுக்க வேண்டிய உணவு உதவித் தொகை நிலுவையில் ரூபாய் 110 கோடியும், ஆக மொத்தம் 510 கோடி ரூபாய் அளவில் உணவு உதவித் தொகையின் சுமையை தாங்க வேண்டியுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அரிசி விலை உயர்வு, உர மானியம் ரத்து என்பது எல்லாம் இதிலே வராது. இது பற்றிய கேள்வியை மட்டும் கேளுங்கள்.

திரு செ.து. வரதராஜன் : 1992-93 ஆம் ஆண்டினுடைய வேளாண்மைக்காக 216 கோடி ரூபாயும், 1993-94 வது நிதி ஆண்டில் 235 கோடி ரூபாயும் அதிகப்படுத்தி செலவு செய் கின்ற காரணத்தினால், விவசாயிகள் பெருவாரியாக உள்ள தமிழகத்தில் உரவிலையை அதிகப்படுத்தியதன் காரணமாக

1993 மார்ச் 23]

விவசாயிகள் மிகவும் துன்புறுகிறார்கள் என்பதற்காக, தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அவர்கள் தங்கு தடையில்லாமல் உரம் கிடைப்பதற்கு ஆவன செய்தகாரணத்தால், நிதி நிலைமை பற்றாக்குறை ஏற்பட்டதன் காரணமாக மத்திய அரசு மீண்டும் இந்த விலை உயர்வைக் குறைப்பதற்கு (குறுக்கீடு) ..ஆவன செய்யுமா, தமிழக அரசு முயற்சி செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசுக்கு கடுமையான நிதி நெருக்கடி இருந்தும் கூட தமிழகத்தினுடைய விவசாயப் பெருங்குடி மக்களின் நலனைக் காப்பதற்கு இந்தியத் துணைக் கண்டத்திலே பல்வேறு திட்டங்களை செயல்படுத்த அதை நிறைவேற்றிக் கொண்டிருக்கிற முதல்வர் என்று, நேற்று டில்லியிலே நடந்த வேளாண்மைக் கொள்கை மாநாட்டிலே, அவர்கள் தமிழக அரசைப் பாராட்டியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தச் செய்தி இன்று காலை 'இந்து' பத்திரிகையிலே வந்திருக்கிறது என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இருந்தும் கூட நம்முடைய முதல்வர். அவர்கள் இந்த உர விலையேற்றத்தைத் தொடர்ந்து விவசாயிகளுக்கு மானிய விலையில் அரிசி வழங்க வேண்டுமென்பதற்காக அவர்கள் விடுத்த கோரிக்கையை ஏற்றுத்தான் மத்திய அரசு 29.9.1992 அன்று முதல் ஒரு டன் இரசாயன உரத்திற்கு 1000 ரூபாயை மானியமாக வழங்கி அறிவித்தார்கள். அதற்காக தமிழகத்திற்கு 34.32 கோடி ரூபாயை கடந்த ஆண்டு ஒதுக்கியது. ஆனால் நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் 5.3.1992 அன்று டெல்லியிலே நடைபெற்ற அனைத்திந்திய முதல்வர்கள் மாநாட்டில் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் உத்தரவின் பேரில், நான் கலந்து கொண்டு, தற்சமயம் அனைத்து உழவர்களுக்கும் வழங்கப்பட்டுள்ள உர மானியமும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ள பல்வேறு மானியமும் தொடர்ந்து கிடைக்க வேண்டும் என்பதனை வற்புறுத்தி வந்திருக்கிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு தா. வேடியப்பன்

திரு. தா. வேடியப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயத்தைப் பொறுத்தவரையில், இன்றைய நிலையில் ஒரு ஏக்கர் வைத்திருக்கும் சிறு விவசாயியும் அந்த ஒரு ஏக்கரை நடவு செய்ய வேண்டுமென்றால் 10 ஆட்கள் தேவை, என்றால் 10 ஏக்கர் வைத்திருக்கிற பெரிய விவசாயி ஆனாலும் அந்த 10 ஏக்கரை நடவு செய்ய 100 ஆட்களை வைத்துத் தான் நடவு செய்ய வேண்டும். எனவே விவசாயியைப் பொறுத்த வரையில் எல்லா விவசாயிகளுக்கும் ஒரே அளவு செலவு மற்றும்

வருமானம் என்பது எல்லாம் ஒரே அடிப்படையில்தான் இருக்கிறது. எனவே உர மானியத்தினால் சிறு விவசாயிகள், குறு விவசாயிகள் பயன் அடைவதாகத் தெரிவித்து இருக்கிறார்கள். ஆனால் முன்பு புரட்சித் தலைவர் ஆட்சிக் காலத்தில் (மணி யடிக்கப் பெற்றது).

முற்பகல் 11-00

மாண்புமிகு பேரவைத் தலைவர் : கேள்வியாகக் கேளுங்கள். பேரவையின் முன் அனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப் படுகிறது.

திரு. தா. வேடியப்பன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்பு நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள் ஆட்சிக் காலத்தில் இதுபோன்று, மத்திய அரசு உர மானியத்திற்குக் கொடுத்த உர மானியத்தைக் குறைத்தபோது புரட்சித் தலைவர் அவர்கள் அதை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று மத்திய அரசை வலியுறுத்தி, அன்று உர மானியத்தை உர உற்பத்தியாளர்களுக்குக் கொடுத்து எல்லா விவசாயிகளும் பயனடையச் செய்தார்கள். அது போன்று நம்முடைய புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியிலும் இதனை மீண்டும் மத்திய அரசு கனிவோடு பரிசீலிக்க வேண்டும் என்ற கோரிக்கை வைக்க வேண்டுமென்று என்னுடைய கோரிக்கையைத் தெரிவித்து அதனை நம்முடைய தமிழக அரசு மறு பரிசீலனை செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரசாயன உரத்திற்கு 30 சதவீத மானியத்தை சிறு குறு விவசாயிகள் பயன்படுத்திக் கொண்டு வருகிறார்கள். ஆனால் அனைத்து விவசாயிகளும் ஒரு டன் உரத்திற்கு ஆயிரம் ரூபாய் மானியத்தைப் பயன்படுத்திக் கொண்டு வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா.சா. பழனிசாமி.

திரு. நா.சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரசாயன உரத்திலே மணிச் சத்து, சாம்பல் சத்தும் உரங்களின் விலையின் கட்டுப்பாட்டை தளர்த்தியதால் அதனுடைய உபயோகம் வெகுவாக குறைந்து, பெரும்பாலான விவசாயிகள் மலிவாகக் கிடைக்கின்ற தழைச்சத்து உரங்களையே மண்ணில் போடுவதால் மண்ணின் வளம் குறையக் கூடிய அபாயம் இருக்கின்ற நிலையில், மணிச்சத்து, சாம்பல் சத்து, உரங்களை மத்திய அரசு, மினரல் அண்டு மெடல் டிரேடிங் கார்பரேஷன் மூலமாக இறக்குமதி செய்து வந்ததை, இப்போது மற்றவர்களும் இறக்குமதி செய்து கொள்ளலாம் என்று அறிவித்து இருக்கின்ற நிலையில் தமிழக அரசே, இந்த உள் நாட்டு உற்பத்தி

1993 மார்ச் 23]

யைவிட மலிவான விலையிலே மணிச்சத்தும், சாம்பல் சத்தும் வெளிநாடுகளிலே கிடைப்பதால், அதனை இறக்குமதி செய்து விவசாயிகளுக்கு விநியோகிக்குமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மணிச்சத்து, சாம்பல் சத்து ஆகிய உரங்களை வெளி நாடுகளிலிருந்து மத்திய அரசின் அனுமதியோடு இறக்குமதி செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த இரண்டு உரங்களுக்கும் மத்திய அரசு வழங்கி வந்த மானியத்தைத் திரும்பப் பெற்ற வுடன் நம்முடைய விவசாயப் பெருங்குடி மக்களுக்குத் தாராள மாகக் குறைந்த விலையிலே கிடைக்க வேண்டும் என்பதற் காக இந்தியத் துணைக் கண்டத்திலே முதன் முதலாக, தேவை ஏற்படின் தமிழக அரசே இறக்குமதி செய்யும் என்ற அறிவிப்பை நம்முடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள்தான் வெளியிட்டார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 157, திரு. ஆர். சிங்காரம், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

157—

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம்

*15761—திரு. ஆர். சிங்காரம்:

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவுக்கு விடையளிப்பாரா:—

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவி பெறும் திட்டத்தின் கீழ், திருமணம் செய்யும் பெண்களின் திரு மண வயதை 18 வயதாகக் குறைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி, சமூக நலத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

அப்படிப்பட்ட செயற் குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. ஆர். சிங்காரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டத்தில் தற்போது வயது உயர்த்தப்பட்டு இருக்கிறது அதை 18 வயதாகக் குறைக்க வேண்டுமென்று நான் கேட்டு இருக்கிறேன். **

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.